# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 அபிப்பிராயம்

பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ("அதிகாரசபை") 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 2018 இன் 32 ஆம் இலக்க பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 22(4) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அலுவலகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அலுவலகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அலுவலகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட

கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அலுவலகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 32 கொண்ட பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 35 பிரிவு | அதிகார சபையின் கூட்டங்கள் மற்றும் அக்கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை ஒழுங்குகள் மற்றும் அதிகார சபையின் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான விதிகள் தயாரிக்கப்படாமை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் கூட்டங்களிற்கான நடைமுறை ஒழுங்குகள் மற்றும் செயற்பாடுகளை முகாமைத்துவம செய்வது தொடர்பான விதிகளை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவு மற்றும் 38 (2) பிரிவு | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அதிகார சபையின் நிதி கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வ உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றை | தற்போது அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் அதிகார சபையின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக மதிப்பீடு | சட்ட ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீடு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டியதுடன் அத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதியை ஆக்கபூர்வமாக பேணிச் செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். மேலும் அச் சட்டத்தின் 38 (2) பிரிவின் பிரகாரம் மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், அவ்வாறான மீளாய்வொன்றை மேற்கொண்டு அதன் பிரதியை கண்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | செய்து மீளாய்வு அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்பாக மீளாய்வு செய்து அந்த அறிக்கையை கண்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டும். |
| (இ) | 1958 இன் 15 கொண்ட ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் மற்றும் 1980 இலக்கம் 46 கொண்ட ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் 16 ஆம் பிரிவு | தொழில் வழங்குனரால் உரிய சதவீதத்தின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக (ETF) பங்களிப்பு தொகை உரிய கால எல்லையினுள் செலுத்த வேண்டிய போதும் 08 ஊழியர்களிற்கு 2022 சனவரி முதல் செப்டம்பர் வரையான காலத்திற்காக ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக பங்களிப்புத் தொகை செலுத்தியிருக்கவில்லை. | ஒப்பந்த ஆளணியினரை ஆட்சேர்த்து குறித்த ஆவணங்களை பூர்த்தி செய்து ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய ஆரப்பித்தது 2022 ஆண்டின் ஒக்டோபர் மாதம் முதல் ஆவதால் அத்திகதி முதல் ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1, 4.2.3, 4.3.1 மற்றும் 4.3.2 பந்திகள் | அதிகார சபையினால் குறைந்த பட்சம் மூன்று ஆண்டு காலத்திற்காக பெறுகைகள் திட்டத்தையும் மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் நேரசூசி | நிரந்தர ஆளணியினர் அங்கீகரிக்கப்பட்டுள் ள போதும் அதற்குரிய ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு | அதிகாரசபையினால் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் பணிகளை அடையாளம் கண்டு அதற்குரிய |

| | | |
|---|---|---|
| மற்றும் மொத்தக் கிரய மதிப்பீடொன்றையும் தயாரித்திருக்கவில்லை. | உரிய நிறுவனத்தினால் தேவையான அங்கீகாரம் உரியவாறு வழங்கப்படாதன் மீது ஏற்பட்ட ஆளணி பற்றாக்குறை மீது அனைத்து முன்னரான திட்டங்களையும் மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவ்வாறாயினும் இந்த ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொள்வனவுகள் மற்றும் ஏனைய பெறுகைகள் வழிகாட்டியை பின்பற்றி மேற்கொள்ளப்பட்டன. | பெறுகைகள் திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வருடாந்த பெறுகைகள் நேரசூசியை மற்றும் மொத்த கிரய மதிப்பீடொன்றை தயாரிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 477,984 தொகையான நட்டம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 477,984 தொகை ஆனது. அதற்கமைய நிதி விளைவுகளில் எவ்வித வளர்ச்சியோ வீழ்ச்சியோ அவதானிக்கப்படவில்லை. இங்கு திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி அதிகார சபையின் ஊழியர் சம்பளம் உள்ளடங்களாக ஏனைய நிருவாக செலவுகளை மேற்கொண்ட பின்னர் திறைசேரிக்கு எஞ்சிய கட்டுநிதி மீதித் தொகை அனுப்பப்படுவதனால் சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செலவினம் மாத்திரம் மீளாய்வாண்டினுள் எஞ்சுதல், இதற்கான பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 முக்கிய வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

கடந்த ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் நிருவாக செலவுகள் முறையே ரூபா 3,744,132 தொகை மற்றும் 8,523,650 தொகையானது. அதன் பிரகாரம், நிருவாக செலவுகள் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 4,779,518 இனால் அதாவது 127 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மேலும், கடந்த ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் ஏனைய செலவுகள் முறையே 34,092 தொகை மற்றும் ரூபா 99,674 தொகையானது. ஆதன் பிரகாரம் ஏனைய செலவுகள் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 65,582 இனால் அதாவது 192 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபை சட்டத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் நோக்கங்கள் மற்றும் 6 பிரிவின் | அதிகார சபைக்கான ஆளணி ஆட்சேர்ப்பு அங்கீகாரம் 2019 ஆண்டு ஆகஸ்ட் அளவிலும், ஆட்சேர்ப்பு திட்ட அங்கீகாரம் | ஆதிகார சபை சட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ள தேவையான வளங்களை |

| | | | |
|---|---|---|---|
| | பணிகளின் பிரகாரம் பெருந்தோட்ட பிராந்தியத்தியங்களின் பணிப்பொறுப்புக்களை மேற்கொள்ள எதிர்பார்த்த போதும், அதற்கு தேவையான நிதி ஏற்பாடு கிடைக்காமை, ஆளணியினர் வெற்றிடம் மற்றும் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ள திட்டத்தை தயாரித்து குறித்த நிறுவனங்களிற்கு உரிய கால எல்லையினுள் சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டிருக்காமை போன்ற விடயங்களின் மீது நிறுவனத்திடமிருந்து எதிர்பார்த்த பணிப்பொறுப்புக்களை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | 2020 திசெம்பர் அளவிலும் பெறப்பட்டுள்ளன. நிதி ஏற்பாட்டை பெற்றுக் கொள்ள தேவையான கோரிக்கைகளும் உரியவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் அதிகார சபையினால் நிறுவன மட்டத்தில் அதற்காக உச்ச முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. | பெற்றுக் கொள்ள தேவையான திட்ட அங்கீகாரத்திற்காக உரிய கால எல்லையினுள் சமர்ப்பிக்க மற்றும் காணப்படும் வளங்களை நிறுவனத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ள ஆக்கபூர்வமாக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2025 மார்ச் 25 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அதிகார சபை பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் பிரிவொன்றாக அமைச்சின் செயலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் பேணிச் செல்ல் பரிந்துரைத்திருந்த போதும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்காததுடன் இது வரையும் பிரிவொன்றாக செயற்பட்டு இருக்கவில்லை. | எதிர்வரும் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக குறிப்பிட நடவடிக்கை எடுக்கிறேன். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்துள்ள பதவிகளிற்காக 28 நிரந்தர அலுவலர்களை நியமிக்க வேண்டிய போதும் 2022 திசெம்பர் 31 திகதி வரை பதிற்கடமை அடிப்படையின் மீது 07 அமைச்சு அலுவலர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையின் மீது 07 பேர்களை ஆட்சேர்த்திருந்த போதும் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. இதன் பிரகாரம் அத்திகதிற்கு நிறுவனத்தினுள் 28 வெற்றிடங்கள் காணப்பட்டன. 2026 மே 31 திகதி வரையும் 03 பதவிகளிற்காக 04 | நிரந்தர ஆளணியினரை ஆட்சேர்ப்பதற்காக தேவையான அங்கீகாரத்தை வழங்காததால் அதிகார சபையின் எதிர்பார்த்த பாரிய பணிப்பொறுப்பை குறைந்த மட்டத்தில் ஏனும் மேற்கொள்ளும் நோக்கில் பணிப்பாயர் சபை அங்கீகாரத்தின் கீழ் மற்றும் அமைச்சின் செயலாளரின் இணக்கப்பாட்டின் மீது மாற்று வழிமுறையாக குறித்த ஒப்பந்த மற்றும் பதிற்கடமை ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டன. | அத்தியவசிய பதவிகளிற்காக ஆளணியினரை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நிரந்தர நியமனங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 1/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பொது முயற்கிகளின் நிறுவன கட்டுப்பாட்டிற்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 பந்தி பிரகாரம் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் நகழ் ஆண்டறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் நகழ் ஆண்டறிக்கை 1,107 நாட்கள் தாமதித்து அதாவது 2026 மார்ச் 13 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. | அதிகார சபையினால் 2024 ஆண்டு வரை நிரந்தர கணக்காளர் ஒருவர் இருக்காததனால் 2019 முதல் ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல் தாமதமானது. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் நகழ் ஆண்டறிக்கையை உரிய திகதில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

### 4.2 வருடாந்த அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 1/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பொது முயற்கிகளின் நிறுவன கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டியின 3.1 வழிகாட்டி மற்றும் தொடர்புடைய இணைப்பு III இன் 4 பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 05 மாதங்களினுள் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய போதும் இந்த அதிகார சபை ஆரம்பிக்கப்பட்ட 2019 ஆண்டின் பின்னர் எந்தவொறு வருடாந்த அறிக்கையையும் கணக்காய்வு திகதிய 2026 மே 20 திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து இருக்கவில்லை. | 2019 வருடாந்த அறிக்கை உடன் 2020 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரின் அங்கீகாரத்திற்கு 2026 மே 27 திகதி முன்வைத்துள்ளதென. | வுழிகாட்டி பிரகாரம் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

## 4.3 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 1/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பொது முயற்கிகளின் நிறுவன கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டியின் 2.3 பிரகாரம் 2022-2026 ஆண்டுகளிற்காக மூலோபாய திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | சுற்றறிகை அறிவுரை பிரகாரம் மூலோபாய திட்டத்தை தயாரிக்க வேண்டும். |

## 4.4 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் நோக்காக் கொண்ட செயற்பாடுகளின் முன்னேற்றம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இலக்ககம் PFD/RED/01/04/2014/01 கொண்ட 2014 பெப்ரவரி 17 திகதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 1/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பொது முயற்கிகளின் நிறுவன கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டியின் 2.3 பிரிவின் இணைப்பு I பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை சுற்றறிக்கையின் தேவைப்பாட்டிற்கு இணங்க தயாரித்திருக்கவில்லை. | 2022 ஆண்டில் நாட்டினுள் நிலவிய பாதகமான பொருளாதார நிலைமையினுள் அதிகார சபையில் இருந்தது மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியினரானதும், வீட்டிலிருந்து கடமைகளை மேற்கொள்ள பின்னணி அலுவலர்களிற்கு இருக்காததன் மீது அறிவுரை வழங்கியுள்ள அனைத்து தொழில்நுட்ப திட்டங்களையும் தயாரிக்க சந்தர்ப்பம் இருக்கவில்லை. | சுற்றறிகை அறிவுரை பிரகாரம் எதிர்வரும் ஆண்டுகளில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | செயல் நடவடிக்கை திட்டத்தினுள் பெருந்தோட்ட சமூகத்திற்காக உரித்துரிமை உறுதி வழங்கலின் கீழ் 6 செயற்பாடுகளை இனங்கண்டு இருந்ததுடன் 600 நலன் பெறுனர்களை இனங்காணல், காணி எல்லையை சுற்றி நிலஅளவை ஆய்வு மற்றும் காணித் துண்டுகளை குறியிடும் 514 ஆய்வினை மேற்கொள்ளல், நலன் பெறுனர்களை உறுதி செய்துகொள்ளல் மற்றும் 514 விண்ணப்பங்களை பூரணப்படுத்துதல், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடமிருந்து 290 உறுதிகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் ஒப்படைப்பினை இலக்காகக் | அமைச்சிடமிருந்து எதிர்பார்த்தவாறு நிதி ஏற்பாடு கிடைக்காததன் மீது 2022 ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தின் ஊடாக பொது திறைசேரி நிதி ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட உறுதி வழங்கும் நிகழ்சித் திட்டத்தின் கீழ் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்வது கடினமாகவுள்ளது. | செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கும் நோக்கம் மற்றும் செயற்பாடுகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதியளவில் உறுதிகளை ஒப்படைக்கும் இலக்கை நிறைவு செய்திருக்கவில்லை. | | |
| (இ) | செயல்நடவடிக்கை திட்டத்தினுள் கண்டி மாவட்டத்தில் நிலைபேறான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 7.8 மில்லியன் செலவில் 13 கொங்கிரீட் பாதைகளை நிர்மாணிக்கவும் மற்றும் சன சமூக நிலையமொன்றை அபிவிருத்தி செய்யவும் திட்டமிட்டிருந்த போதும் சன சமூக நிலையத்தை அபிவிருத்தி செய்திருக்காததுடன் 05 கொங்கிரீட் பாதைகளையும் நிர்மாணித்து இருக்கவில்லை. | அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பிரகாரம் முகாமை செய்து கொண்டு, செயற்திட்டத்தை ஆய்வு மதிப்பீடு செய்து முன்னுரிமை அடிப்படையில் 8 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. | செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கும் நோக்கங்களை மற்றும் செயற்பாடுகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.5 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 1/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொது முயற்சிகளின் நிறுவன ரீதியான கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டியில் 4.2 வழிகாட்டி பிரகாரம் 03 மாதங்களிற்கு ஒரு முறை ஒன்றுகூட வேண்டிய போதும் அதிகார சபையினால் 2022 முதல் 2026 மே 21 திகதி வரை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டு இருக்கவில்லை. | அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் அதிகார சபையின் பணிகள் கணக்காய்வு செய்யப்படுவதுடன் மூன்று மாதங்களிற்கு ஒரு முறை அமைச்சின் கீழ் இடம்பெறும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்றது. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.6 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2030 அளவில் தமது அமைப்பிற்கு உரிய அனைத்து நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பினை வழங்குவதனை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சி நிரலை அறிமுகம் செய்துள்ளதுடன் அதற்கு பொருத்தமான வகையில் எதிர்பார்த நோக்கங்களை | ஏற்றுக் கொள்கிறேன். தற்போது அதற்கு தேவையான முயற்கள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சி நிரலிற்கு இணங்க அதிகார சபையின் எதிர்பார்த்த நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டு அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இனங்காண வேண்டிய போதும், அதிகார சபையினால் எதிர்பார்த்த நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டு அந்த நோக்கங்களை அடைந்து கொள்ளவதற்காக சரியான தரவுகளை பெற்றுக் கொள்ளும் மற்றும் பௌதீக வளங்களை முகாமை செய்யும் முறைமையை திட்டவட்டமாக இனங்கண்டு பொருண்மையாக செயற்படுத்த 2022 திசெம்பர் 31 வரை 4 ஆண்டு காலத்தினுள் தோல்வியடைந்திருந்தது.